# புதிய எதிரி வந்துள்ளான்
# அதன் முன்னால் நாங்கள்

**அந்தக்கால மீட்பாளர்**

எல்லா அழிவுகளுக்கும் இந்த கொடிய யுத்தம் தான் காரணம் என்று இன்றைய அரசாங்கமும், இதற்கு முன்பிருந்த அரசாங்கமும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கூறிக் கொண்டிருந்தன. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதனால் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது, கல்வி மற்றும் சுகாதாரத்துறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது, யுத்தம் நடக்கின்றது. யுத்தம் நடப்பதால் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க முடியாது. இவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். இப்போது யுத்தம் முடிந்து 4 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்தபாடில்லை. ஆனால் யுத்த வெற்றிகள் என்ற வகையில் அந்த வரலாற்றுக்குள் நன்றாக பராமரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ள இனவாதம் நீறுபூத்த நெருப்பாக சமூகத்துக்குள் மறைந்திருக்கிறது. யுத்தத்தின் பின்னர் மக்களின் எந்தப் பிரச்சினைக்குமே தீர்வு பெற்றுக் கொடுக்க வக்கில்லாது ஆட்சியாளர்கள் தங்களது இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக அந்த தீப்பொறிகளை ஊதி மீண்டும் இனவாதத் தீயை மூட்டி எமது சமூகத்தை அழிவுக்குள் தூக்கி எறிய முயற்சிப்பது தெரிகிறது. யாழ் பல்கலைக் கழக மாணவர்களை கைது செய்து, டுவுவுநு மீண்டும் எழுச்சி பெற்று வருவதாக செய்திகளை தயாரித்து தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் துவேஷத்தை விதைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் இன்னும் நிறுத்தப்படவில்லை. இதற்கிடையில் அரசாங்கத்திற்கு புதிய எதிரி கிடைத்துள்ளான். அதுதான் முஸ்லிம் மக்கள். சமூகத்திலிருக்கும் இனவாத தீப்பொறிகளை மேலும் ஊதி பெருப்பித்து முஸ்லிம் மக்களை எதிரியாக சமூகத்தின் முன்னால் கொண்டு நிறுத்துவதற்கான கூட்டு வேலைத் திட்டமொன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசாங்கமும், எதிர்க் கட்சியில் இருக்கும் முதலாளித்துவ கட்சிகளும் அவர்களை சுற்றி நிற்பவர்களும் அந்த தீப்பொறிக்கு எண்ணெய் ஊற்றி தமது இயலாமையை மூடி மறைப்பதற்காக அதனை பயன்படுத்தி குளிர்காய தயாராகவே இருக்கிறார்கள்.

**முஸ்லிம் விரோதம்**

பல தசாப்தங்களாக இனவாதம் பராமரிக்கப்பட்டு வந்த மண்ணிலிருந்து தம்புள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தின் ஊடாக முஸ்லிம் விரோதம் மேடைக்கு வருகிறது. பின்னர் குருநாகல், அனுராதபுரம், கொழும்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது வரை அது வளர்ந்திருக்கின்றது. சமீபத்தில் எம்பிலிபிட்டிய நகரத்தில் வியாபாரம் செய்த முஸ்லிம் வியாபாரிகள் தாக்கப்பட்டது வரை நிலைமை முன்னேறியது. முஸ்லிம் சனத்தொகை அதிகரித்து அவர்கள் நாட்டின் பெரும்பான்மை இனமாக ஆகிவிடுவார்கள், அப்படி நடந்தால் பெரிய குழப்ப நிலை உருவாகும் என்று கூறுகிறார்கள். சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சையின்போது, முஸ்லிம் மக்களுக்கு நண்மை பயக்கும் விதத்திலான முறைகேடு நடந்திருப்பதனால், அந்த பரீட்சையை ரத்து செய்ய வேண்டுமென்ற கதைகளும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன.

**உண்மையாகவே இந்தக் கதைகள் உண்மைதானா?**

பொருட்களின் விலை அதிகரிப்பதும், வாழ்வது கஷ்டமாக இருப்பதும், சிலபேரின் சுகபோகத்துக்காக பெரும்பாலானோரிடமிருந்து பறித்துக் கொள்வதன் காரணமாகத்தான் என்பதை மறைப்பதற்காக, நாட்டின் வருமானம் பிரிந்து செல்வதில் முரண்பாடுகள் இருப்பதனால்தான் வாழ்க்கையில் அநேகமானவை இல்லாமலாக்கப்பட்டுள்ளன என்பதை மறைப்பதற்காக ஹலால் சான்றிதழ் தான் பொருட்களின் விலையேற்றத்துக்கு காரணம் என்று காட்ட முயற்சிக்கப்படுகிறது. வர்த்தக சந்தையில் நிலவும் வியாபாரப் போட்டியின் காரணமாக எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ”எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்” என்பதை போன்று, இந்த நிலைமையை முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு சில வியாபாரிகள் முயன்று வருகிறார்கள். சில முஸ்லிம் வியாபாரிகளுக்கு சொந்தமான துணிக்கடைகளில் உடை மாற்றும் அறைகளில் புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன, அதனால் அந்தக் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாம் என்று பாரிய பிரச்சாரமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் கம்பஹா, கொழும்பு போன்ற சில பிரதேசங்களில், சிங்கள வியாபாரிகளுக்கு சொந்தமான துணிக் கடைகளில் அப்படியான கருவிகள் பொருத்தப்பட்டிருந்தமையால் பிரச்சினைகள் உருவாகின. ஆதலால் இது சிங்கள - முஸ்லிம் பிரச்சினை அல்ல.

முஸ்லிம் கடைகளில் பொருட்களை வாங்கிய பின்னர் மீதி பணத்துக்காக கொடுக்கப்படும் டொபியை சாப்பிட்டவுடன் மலட்டுத்தன்னை ஏற்படும், சிங்கள இனப் பெருக்கத்தை குறைப்பதற்கான சூழ்ச்சி இதன் பின்னணியில் இருப்பதாக கூறுகிறார்கள். ஆகவே முஸ்லிம் கடைகளில் பொருட்கள் வாங்க வேண்டாமென்ற பிரச்சாரம் நடக்கிறது. உண்மையாகவே அப்படி ஒரு சந்தேகம் இருந்தால், அரசாங்க தலையீட்டோடு சுகாதார அமைச்சின் ஊடாக பரிசோதித்து, உண்மை நிலையை மக்களுக்கு சொல்லி தவறு நடந்திருந்தால் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பொருட்கள் வாங்க செல்கிறவர்கள் அந்த டொபியை எடுக்காமலிருப்பது நல்லதல்லவா. அதை செய்யாமல், ஹலால் பொருட்களுக்காக பெறப்படும் பணம் பௌத்த மதத்துக்கு எதிராக பயன்படுத்தப்படுவதாகவும், ஆதலால், ஹலால் பொருட்களையும், முஸ்லிம் கடைகளில் பொருட்களையும் விலைக்கு வாங்க வேண்டாமென்று முன்னெடுத்து வரும் பிரச்சாரங்களின் உண்மையான நோக்கம், வியாபார நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதுதான் என்பது தெரிகிறது. இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு செலாவணியில் பெரும் பகுதி வெளிநாடுகளில் வேலை செய்யும் உழைப்பாளிகளிடமிருந்தே

கிடைக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் பெரும்பகுதி பெண்களிடமிருந்து கிடைப்பதும் தெரியும். முஸ்லிம் கடைகளில் பொருட்கள் வாங்க வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். முஸ்லிம் மக்களோடும், இஸ்லாத்தோடும் பிரச்சினை இருப்பதாக சொல்லிக் கொண்டே மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வரவழைக்கும் எரிபொருளை நிறுத்தும்படி சொல்வதில்லை. ஆகவே இந்த பிரச்சாரத்தை முன்னெடுத்து வரும் அடிப்படைவாத இயக்கங்களினதும், அரசாங்கத்தினதும் உண்மையான நோக்கத்தை விளக்க வேண்டியதில்லை. ஹலால் சான்றிதழ் இஸ்லாமிய கலாச்சார தேவையோடு ஆரம்பிக்கப்பட்டாலும், இன்று அது, வியாபார நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்டுவரும் வியாபாரமயமாக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. ஒரு பக்கத்தில் வியாபாரத்தை நோக்கமாக கொண்டு “எடுங்கள் எமது பொருளை” என்ற சூரிய சிங்க இலட்சினை விற்கப்படுகிறது. மறுபக்கம் ஹலால் சான்றிதழ் விநியோகம். இவை வியாபார பிரசினையேயல்லாது சிங்கள - முஸ்லிம் பிரச்சினையல்ல.

டொபி சாப்பிட்டு மலட்டுத் தன்மையடைந்து சிங்கள மக்கள் தொகை குறைந்துள்ளதாக தெரியவில்லை. ஒரு குடும்பத்தில் குழந்தை பெறுவது குறைவதற்கான காரணம், குழந்தைகளை பராமரிப்பதற்காக சக்தி இந்த பொருளாதார முறைக்குள் இல்லாமைதான். அதனால் பெரும்பாலான பெற்றோர்கள் குழந்தைகள் பெறுவதை குறைத்துக் கொள்கின்றனர். பிறந்த குழந்தையையே பராமரித்துக் கொள்ள வழியில்லாமல் குழந்தையோடு களனி கங்கையில் பாயும் தாய்மார்களை பற்றிய எத்தனையே செய்திகளை நாங்கள் பார்த்திருக்கிறோம். சிங்கள மக்கள் மாத்திரமல்ல, தமிழ் முஸ்லிம் மக்களும் தமது குடும்பத்தில் பிறப்பு விகிதத்தை குறைத்துக் கொள்ள முயற்சிப்பதற்கான காரணம் என்னவென்று எல்லோருக்கும் தெரியும். எனவே இப்படியான விடயங்களைக்கூட தமது இனவாத நோக்கத்துக்காக பயன்படுத்தும் நிலைக்குள் அடிப்படைவாத அமைப்பும் ஆட்சியாளர்களும் வீழ்ந்திருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம். அதில் பிரச்சினை இருப்பதாக இன்று நாடு பூராவும் பேசப்படுகிறது. இந்த நாட்டின் அனைத்து நிறுவனங்களும் அரசியல்மயமாக்கப்பட்டு, மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது எங்களுக்கு தெரியும். நிமல் சிறிபால தி சில்வா சுகாதாரத்துறை அமைச்சாராக இருந்த காலத்தில் பதுளை பிரதேசத்தை சேர்ந்த தனது பெரும்பாலான ஆதரவாளர்களுக்கு சுகாதார அமைச்சில் தொழில் வாய்ப்புகளை வழங்கினார். சம்பிக ரணவக மின்வலுத்துறை அமைச்சரானதன் பின்னர் ஹெல உறுமய கட்சியின் ஆதரவாளர்களை மின்சார சபை உள்ளிட்ட அமைச்சின் பெரும்பாலான பதவிகளுக்கும் நியமித்தார். ரவூப் ஹகீம் நீதி அமைச்சரானதன் பின்னர் அமைச்சின் வெற்றிடங்களுக்கு தனது ஆதரவாளர்களை நியமித்துக் கொண்டார். இதுதான் யதார்த்தம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை மட்டுமல்ல, கடந்த காலங்களில் புலமைப் பரீட்சையிலிருந்து உயர்தர பரீட்சை வரை அனைத்து பரீட்சைகளிலும் முறைகேடுகள் நடந்தன. கடந்த சாதாரணதர பரீட்சையின்போது விஞ்ஞான வினாத்தாள் ஏற்கனவே வெளிவந்தமை எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அதனால் சிங்கள மாணவர்களுக் விஷேட நண்மை கிடைத்ததனால் சிங்கள மக்கள் மீது குற்றத்தை சுமத்தி இனவாத ரீதியாக செயல்படுவது தவறு. இங்கு தமிழ் வினாத்தாள் ஏற்கனவே வெளிவந்து விட்டதனால் முறைகேடு நடந்திருந்தால் அது எமது கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் விளைவேயல்லாது முஸ்லிம் மாணவர்களின் பிரச்சினையல்ல.

**உண்மையான பிரச்சினை என்ன?**

எமது நாட்டைப் போன்ற பின்தங்கிய நாடுகளின் ஆட்சியாளர்களால் மக்களின் உரிமைகளை வழங்க முடியாது. அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. நவ தாராளமய முதலாளித்துவம் செயற்பட்டு வரும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவர்களால் சமூகத்துக்கு பொருளாதார வளர்ச்சியை கொடுக்கு முடியாது. தாங்க முடியாத வரிச்சுமையை மட்டுமே கொடுக்க முடியும். ஜனநாயத்தை தர முடியாது. அடக்குமுறையை மட்டுமே கொடுக்க முடியும். இந்த சமூக முறையால் எங்களுக்கு வாழ்க்கையை தர முடியாது. எங்களது வாழ்நாள் பூராவும் வாழ்வதற்கான வழியை தேடுவதிலேயே காலத்தை செலவிடுகிறோம். இறுதியாக கலை, விளையாட்டு, மனித உறவுகள், கூட்டுச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு நேரம் போதாது. அதாவது வாழ்வது என்ற பெயரில் எங்களது வாழ்க்கை பறிக்கப்பட்டுள்ளது. சமூத்தில் நிலவும் இந்த அழுத்தம் குற்றச் செயல்கள், சமூக விரோத செயல்கள் போன்ற பல்வேறு வேடங்களில் வெடித்து சிதறுகிறது. ஆகவே இவர்களால் சமூகத்துக்கு நாகரிகத்தை தர முடியாது. அநாச்சாரத்தையம், அநாகரிகத்தையுமே தர முடியும். சொல்வதற்கு ஒன்றுமில்லாமல், சமூகத்துக்கு எதையுமே தர முடியாத ஆட்சியாளர்கள் பிடித்துக் கொள்ள ஒன்றுமில்லாமல் மதவாதத்தையும் இனவாதத்தையும் பிடித்துக் கொண்டு, அவற்றை முகாமைத்துவம் செய்து, போலி எதிரிகளை நிர்மாணித்து, மக்களின் உண்மையான எதிரிகளான ஆட்சியாளர்களின் இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சியை சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து தோற்கடிக்க வேண்டும்.

இந்த நிலைமை மேலும் வளர்ந்தால், வரலாறுகளில் நடந்தது போன்றே பாரிய அழிவுக்குள் எமது நாடு தள்ளப்படுவதை தடுக்க முடியாதுபோகும். சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருவரையொருவர் கொன்று கொள்ளும் அழிவு எங்களுக்கு இனிமேலும் தேவையில்லை. இனவாதம் ஆட்சியாளர்களின் இருப்பை உறுதி செய்வதற்கான ஆயுதமாக இருப்பதனால், இது குறித்து கவனமாக இருந்து அதனை தோற்கடிப்பதற்காக ஒன்று சேர்வது எங்கள் அனைவரினதும் பொறுப்பாகும். இந்த பொறியிலிருந்து எங்களுடை சமூகத்தை பாதுகாப்பதற்காக அணிதிரள்வோம். அதற்காக முன்னிலை வகிப்போம்.

# சம உரிமை இயக்கம்

**சம உரிமை இயக்கத்தோடு தொடர்புகொள்ள எங்களை அழையுங்கள்**

■ விலாசம் - 400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல

■ தொலைபேசி - 0714-966738, 011-2799432 ■ மின்னஞ்சல் -

# අලුත් හතුරෙක් ඇවිත්
# ඒ ඉදිරියේ අපි...?

### ඒ කාලයේ ගැලවුම්කරුවා

යුද්ධය පැවැති කාලයේ වත්මන් ආණ්ඩුවත් මීට පෙර පැවැති ආණ්ඩුවත් හැම ව්‍යසනයකටම හේතුව ලෙස පෙන්නුවේ යුද්ධය. බඩු මිල අඩු කරන්න බැරි යුද්ධය නිසා, අධ්‍යාපනය-සෞඛ්‍ය ප්‍රශ්න විසඳන්න බැරි යුද්ධය නිසා, ජනතාවට ප්‍රජාතන්ත්‍රවාදී අයිතීන් දෙන්න බැරි යුද්ධය නිසා, මේ අය කීවේ ඒ විදිහට. දැන් යුද්ධය අවසන් වෙලා අවුරුදු හතරකට ආසන්න වුණත් ඒ ප්‍රශ්න කිසිවකට විසඳුම් ලැබිලා නම් නැහැ. හැබැයි යුද්ධයේ අස්වැන්න විදිහට ඒ ඉතිහාසය ඇතුළෙ හොඳින් හැදී වැඩී පෝෂණය වුණු ජාතිවාදය සමාජය තුළ අලුයට ගින්දර වගේ සැඟවිලා තියෙනවා. යුද්ධයෙන් අනතුරුව ජනතාවගේ ප්‍රශ්න කිසිවකට විසඳුම් දෙන්න සමත් වෙලා නැති පාලකයෝ, තමන්ගෙ අසමත්කම් වහගන්න ඒ ගිනි පුපුරුවලට පිඹිමින් යළි ජාතිවාදී ගිනි අවුළුවා, අපේ සමාජය විනාශයකට ඇද දමන්න උත්සාහ දරමින් සිටින බව නම් පැහැදිලියි. LTTE සංවිධානයේ යළි නැගිටීමක් පිළිබඳ පුවත් මවමින් දෙමළ ජනතාවට එරෙහිව සිංහල ජනතාව තුළ වෛරය වපුරන්න දරන උත්සාහය තවමත් අත්හැර නැහැ. යාපනයේ විශ්වවිද්‍යාලයේ ශිෂ්‍යයන් අත්අඩංගුවට ගැනීම මේ සඳහා එක් උදාහරණයක්. ඒ අතරම හදිසියේ ආණ්ඩුවට අලුත් හතුරෙක් හමුවෙලා. ඒ තමයි මුස්ලිම් ජනතාව. සමාජය තුළ තිබෙන ජාතිවාදී ගිනි පුපුරුවලට නව හුස්මක් පිඹ අවුළුවා මුස්ලිම් ජනතාව සතුරා ලෙස සමාජය ඉදිරියේ ගෙනත් තබන්න සංවිධානාත්මක වැඩපිළිවෙළක් ක්‍රියාත්මක වෙමින් තිබෙනවා. ආණ්ඩුවයි විපක්ෂයේ ඉන්න ධනපති පක්ෂයි ඔවුන් වටේ ඉන්න තවත් බොහෝ දෙනෙකුයි එයට පිදුරු දමමින් තම අසමත්කම් වහගන්න ඒ තත්වය පාවිච්චි කරන්න සූදානම් වෙලා ඉන්නවා.

### මුස්ලිම් විරෝධය

දශක ගණනාවක් පුරා ජාතිවාදය පෝෂණය කළ පස තුළින්ම මුස්ලිම් විරෝධය කරළියට එන්නේ දඹුල්ලෙ මුස්ලිම් දේවස්ථානයකට එරෙහි උද්ඝෝෂණ හරහා. පසුව කුරුණෑගල, අනුරාධපුර, කොළඹ මුස්ලිම් දේවස්ථානවලට පහරදීම් දක්වා එය වර්ධනය වුණා. මෑතක දී ඇඹිලිපිටිය නගරයේ වෙළඳාම් කළ මුස්ලිම් ජාතිකයින්ට පහරදීම දක්වා එම තත්වය පෙරට පැමිණියා. මුස්ලිම් ජනගහනය වැඩි වෙලා ඔවුන් රටේ බහුතරය බවට පත්වෙයි, එහෙම වුණොත් ලොකු අවුලක් වෙයි කියලා කියනවා. හලාල් සහතිකයට කරන ගෙවීම් නිසා භාණ්ඩවල මිල වැඩි වෙනවා, ඒ නිසා හලාල් භාණ්ඩ මිලට ගන්න එපා කියලත් කියනවා. නීති ප්‍රවේශ විභාගයේ දී මුස්ලිම් ජාතිකයන්ට විශේෂ වාසියක් වන ආකාරයේ අක්‍රමිකතාවක් සිදු වෙලා තිබෙන නිසා ඒ විභාගය අවලංගු කරන්න කියලා සාකච්ඡාවකුත් මතු වෙලා තිබෙනවා.

### ඇත්තටම මේ කතා ඇත්තද?

බඩු මිල වැඩි වෙන්නෙ, ජීවත් වෙන්න අමාරු වෙන්නෙ සුළු පිරිසකගෙ සුඛවිහරණය වෙනුවෙන් වැඩි දෙනාගෙන් උදුරා ගැනීම නිසා බව වසන් කරන්න, රටේ ආදායම් බෙදීයාමේ විෂමතාව නිසා අතිබහුතරයක් ජනතාවට ජීවිතේ බොහෝ දේ අහිමි වෙලා තිබෙන බව සඟවන්න, බඩු මිල වැඩි වෙන්නෙ හලාල් සහතිකය නිසා බව කියලා පෙන්නන්න උත්සාහ දරනවා. වෙළඳපොළ තුළ තිබෙන ව්‍යාපාරික තරගය නිසා මුහුණ දී තිබෙන අර්බුද විසඳා ගන්න "කල දුටු කල වල ඉස ගැනීමේ" අරමුණින් මේ තත්වය මුස්ලිම් ව්‍යාපාරිකයන්ට එරෙහිව යොදා ගැනීමට ඇතැම් ව්‍යාපාරික කොටස් උත්සාහ දරනවා. ඇතැම් මුස්ලිම් ව්‍යාපාරිකයින්ට අයත් රෙදිපිළි කඩවල ඇඳුම් මාරු කරන කාමරවල කැමරා සවි කරලා තියනවා, ඒ නිසා ඒ කඩවලින් බඩු ගන්න එපා කියල ලොකු ප්‍රචාරයකුත් ගෙනියනවා. අපි දන්නවා, පසුගිය කාලයේ ගම්පහ, කොළඹ ආදී ස්ථාන කිහිපයකම සිංහල ව්‍යාපාරිකයන්ට අයත් රෙදි-පිළි කඩවල එවැනි කැමරා සවි කරලා තිබිලා විශාල ප්‍රශ්න ඇති වුණා. ඒ නිසා මේක සිංහල-මුස්ලිම් ප්‍රශ්නයක් නොවෙයි.

මුස්ලිම් කඩවලින් බඩු ගත්තම ඉතුරු සල්ලි වෙනුවට දෙන ටොෆිය කෑවම වඳභාවයට පත් වෙනවා, සිංහල ජනගහනය අඩු කිරීමේ කුමන්ත්‍රණයක් මේ පිටුපස තියනවා, ඒ නිසා මුස්ලිම් කඩවලින් බඩු ගන්න එපා කියලා ලොකු ප්‍රචාරයක් සිදුවෙමින් තිබෙනවා. ඇත්තටම එහෙම සැකයක් තියනවා නම් ආණ්ඩුව මැදහත් වෙලා සෞඛ්‍ය අමාත්‍යාංශය හරහා ඔය ටොෆිය පිළිබඳ පරීක්ෂණයක් කරලා ඇත්ත තත්වය පිළිබඳ ජනතාව දැනුවත් කරලා වරදක් වෙලා තියනවා නම් අවශ්‍ය නීතිමය පියවර ගන්න ඕන. ඒ කිසිවක් නොකර හලාල් භාණ්ඩ සඳහා කරන ගෙවීම්වලින් එකතුවන මුදල් බෞද්ධ ආගමට එරෙහිව යොදා ගන්නා බවත්, ඒ නිසා හලාල් භාණ්ඩත්, මුස්ලිම් කඩවල භාණ්ඩත් මිලට ගන්න එපා කියලා ගෙනියන ප්‍රචාරයේ ඇත්ත උවමනාව ව්‍යාපාරික අරමුණු ඉටුකර ගැනීමක් බව ඉතා පැහැදිලියි.

ලංකාවට ලැබෙන විදේශ විනිමයෙන් වැඩිම ප්‍රමාණයක් ලැබෙන්නෙ විදේශ රැකියාවලට යන ශ්‍රමිකයන්ගෙන් බව අපි

කවුරුත් දන්නවා. ඒ අතරින් වැඩිම ප්‍රමාණයක් විනිමය ලැබෙන්නෙ මුස්ලිම් ජනතාව ජීවත් වන, මුස්ලිම් ආගම පවතින මැදපෙරදිග රටවල ගෘහ සේවය සඳහා යන කාන්තාවන් හරහා බව රහසක් නොවෙයි.

මුස්ලිම් කඩවලින් බඩු ගන්න එපා කියන ගමන්ම කාන්තාවන් මැද පෙරදිග රටවලට යවනවා. මුස්ලිම් ජනතාව එක්ක, මුස්ලිම් ආගම එක්ක ලොකු ප්‍රශ්නයක් තියනවා කියන ගමන්ම මැදපෙරදිගින් ගෙන්වන ඉන්ධන නතර කරන්න කියන්නෙ නැහැ. ඒ නිසා මේ ප්‍රචාර ගෙන යන අන්තවාදී සංවිධානවලයි, ආණ්ඩුවෙයි සැබෑ අරමුණ අමුතුවෙන් පැහැදිලි කරන්න අවශ්‍ය නැහැ. හලාල් සහතිකය නිකුත් කිරීම මුස්ලිම් ජනතාවගේ සංස්කෘතික අවශ්‍යතා සමග ආරම්භ වූවක් වුණත් අද වන විට එය ව්‍යාපාරික අරමුණු වෙනුවෙන් යොදා ගනු ලබන අතිශය වෙළඳපොළකරණය වූවක් බව පැහැදිලියි. එක පැත්තකින් ව්‍යාපාරික අරමුණු වෙනුවෙන් “ගන්න අපේ දේ” කියල සූර්ය සිංහ ලාංඡනය අලෙවි කරන කොට අනෙක් පැත්තෙන් හලාල් සහතික නිකුත් කිරීම ව්‍යාපාරික ප්‍රශ්නයක් මිස මුස්ලිම්-සිංහල ප්‍රශ්නයක් නොවෙයි.

ටොෆි කාලා ජනතාව වඳභාවයට පත් වෙලා සිංහල ජනගහනය අඩු වීමක් නම් වෙලා නැහැ. පවුලක දරුවො ප්‍රමාණය අඩුවෙන්නෙ ඔවුන් පෝෂණය කරන්න තරම් හයියක් මේ ආර්ථික ක්‍රමය ඇතුළෙ නැති නිසා දරුවන් ගණන සීමා කරන්න බොහෝ දෙමාපියන් කටයුතු කරන නිසා. ඉපදුනු දරුවත් හදාගන්න ක්‍රමයක් නොමැතිව දරුවට වස පොවලා, තමනුත් වස බොන මව්වරු ගැන කොතරම් ප්‍රවෘත්ති අපි අහල තියනවාද? තමන්ගෙ දරුවා හදාගන්න ක්‍රමයක් නැතිව දරුවත් සමග කැළණි ගඟට පනින මව්වරු ගැන පුවත්පත් පිටුවල අපි කොතරම් දැකලා තියනවාද? සිංහල ජනතාව විතරක් නොවෙයි දෙමළ, මුස්ලිම් සෑම ජාතික ප්‍රජාවකගෙම පවුලක දරුවන් ප්‍රමාණය සීමා කරන්න මේ හේතුව නිසා සිදු වෙලා තිබෙන බව අපි කව්රුත් දන්නවා. ඉතින් මෙවැනි දේ පවා ජාතිවාදය සඳහා යොදා ගන්න තරම් පහත් තැනකට අන්තවාදී සංවිධානයි රටේ පාලකයොයි ඇද වැටීම කණගාටුදායකයි.

නීති ප්‍රවේශ විභාගයෙන් සමත් වෙලා ඉන්න මුස්ලිම් ශිෂ්‍ය ප්‍රමාණය වැඩියි, ඒකෙ ප්‍රශ්නයක් තියෙනවා කියල ලොකු සාකච්ඡාවක් මේ දිනවල සිදු වෙනවා. අපි දන්නවා, අපේ රටේ මේ සියලු ආයතන දේශපාලනීකරණය වෙලා අන්ත දූෂිත තත්වයට ඇද වැටිලා තිබෙන බව. නිමල් සිරිපාල ද සිල්වා මහත්තයා සෞඛ්‍ය ඇමති වෙලා ඉන්න කාලෙ සෞඛ්‍ය අමාත්‍යංශයේ වැඩිපුරම සේවයට බඳවා ගත්තේ බදුල්ල දිස්ත්‍රික්කයේ එතුමාගේ දේශපාලන හිතවතුන්. චම්පික රණවක මහත්තයා විදුලිබල ඇමැති වෙන කොට විදුලිබල මණ්ඩලය ඇතුළු අමාත්‍යංශයේ බොහෝ තැන්වල සේවයට බඳවා ගත්තෙ හෙළ උරුමයේ දේශපාලනයට සම්බන්ධ එතුමාගේ හිතවතුන්. රවුෆ් හකීම් මහත්තයා අධිකරණ ඇමැති වුණාම අධිකරණ අමාත්‍යාංශයේ බොහෝ තැන්වලට බඳවා ගත්තේ එතුමාගේ හිතවතුන් වීම අපේ රටේ යථාර්ථයක් මිස අලුත් දෙයක් නොවෙයි. නීති ප්‍රවේශ විභාගය විතරක් නොවෙයි, පසුගිය කාලයේ ශිෂ්‍යත්ව විභාගයේ සිට උසස් පෙළ විභාගය දක්වා සෑම විභාගයකම අක්‍රමිකතා සිදු වුණා. පසුගිය සාමාන්‍ය පෙළ විභාගයේ විද්‍යා ප්‍රශ්න පත්‍රය කලින් පිට වුණා කියලා දැන් මුළු රටම දන්නවා. එතකොට ඒකෙන් සිංහල ශිෂ්‍යයන්ට විශේෂ වාසියක් වෙලා තියනවා කියලා සිංහල විරෝධී ලෙස ජාතිවාදය සඳහා එය යොදා ගත්තොත් වැරදියි. මෙතනදීත් දෙමළ ප්‍රශ්න පත්‍රය කලින් පිට වෙලා, අක්‍රමිකතාවක් වුණා නම් ඒක අපේ රටේ අධ්‍යාපන ක්ෂේත්‍රය මුහුණ දීලා තිබෙන බරපතල කඩා වැටීමේ ප්‍රතිඵලයක් මිස මුස්ලිම් ශිෂ්‍යයන්ගේ ප්‍රශ්නයක් නෙවෙයි නේද?

### සැබෑ ප්‍රශ්නය කුමක්ද?

අපේ රට වැනි පසුගාමී රටවල පාලකයන්ට ජනතාවට අයිතීන් දෙන්න බෑ. ඔවුන්ගේ ප්‍රශ්නවලට විසඳුම් දෙන්නත් බෑ. නව ලිබරල් ධනවාදය පවතින සමාජයේ පීඩිත ස්ථරවල අයිතීන් තව තවත් උදුරා ගන්නවා. මේ අයට සමාජයට ආර්ථික සංවර්ධනය දෙන්න බෑ. දෙන්න පුළුවන් උහුලන්න බැරි බදු බරයි ජීවන වියදමයි විතරයි. ප්‍රජාතන්ත්‍රවාදය දෙන්න බෑ. දෙන්න පුළුවන් මර්දනය විතරයි. මේ සමාජ ක්‍රමයට අපිට ජීවිතය දෙන්න බෑ. අපේ මුළු කාලයම ජීවත් වෙන්න යන වියදම හොයා ගන්න කැප කරනවා. අවසානයේ දී කලාව, ක්‍රීඩාව, මිනිස් සබඳතා සාමූහික ක්‍රියාකාරකම් ආදියට වෙලාවක් ඉතුරු වෙන්නෙ නෑ. ඒ කියන්නෙ ජීවත්වීමේ නාමයෙන් අපිට ජීවිතය අහිමි කරලා. සමාජයේ ඇති මේ පීඩනය අපරාධ, අපචාර, විෂමාචාර වගේ විවිධ වේශයන්ගෙන් පුපුරා යනවා. ඒ නිසා මේ අයට සමාජයට ශිෂ්ටත්වය දෙන්න බෑ. දෙන්න පුළුවන් ම්ලේච්ඡත්වය, වනචාරිත්වය විතරයි. කියන්න දෙයක් නැතිව, සමාජයට කිසිවක් දෙන්න බැරිව ඉන්න පාලකයින් අන්තිමට එල්ලෙන පිදුරුගහ තමයි ජාතිවාදය සහ ආගම්වාදය. එම අගතීන් කළමනාකරණය කරමින් ව්‍යාජ හතුරෙක් නිර්මාණය කරල ජනතාවගේ සැබෑ සතුරා වුණු පාලකයින් තමන්ගේ අසමත්කම් වහගන්න දරන උත්සාහය සිංහල, දෙමළ, මුස්ලිම් සියලුම පීඩාවට පත් ජනතාව එකතු වෙලා පරාජය කරන්න ඕන.

මේ තත්වය වර්ධනය වුණොත් ඉතිහාසයේ වගේම ලොකු විනාශයකට අනාගතයේදී අපේ රට ඇද වැටීම වළක්වන්න බැහැ. සිංහල, දමිළ, මුස්ලිම් ජනතාව මරා ගන්න ව්‍යවසනයක් යළිත් අපට අවශ්‍ය නැහැ. ජාතිවාදය පාලකයන්ගෙ පැවැත්ම තහවුරු කරන දෙයක් වගේම පීඩිත ජනතාවගෙ අනාගතය පිළිබඳ ප්‍රශ්නයක්. එය සමාජයේ ශිෂ්ටත්වය පිළිබඳ ප්‍රශ්නයක්. මනුෂ්‍යත්වය පිළිබඳ ප්‍රශ්නයක්. ඒ නිසා මේ තත්වය පිළිබඳ අවබෝධයෙන් එය පරාජය කරන්න එකතුවීම අපි හැමෝගේම වගකීමක්.

මේ උගුලෙන් අපේ සමාජය බේරා ගැනීම සඳහා පෙළ ගැසෙමු. සිංහල වේවා, දෙමළ වේවා, මුස්ලිම් වේවා ඕනෑම ආකාරයක අන්තවාදයන්ට එරෙහි වෙමු. ඒ සඳහා පෙරමුණ ගනිමු.

# සම අයිතිය ව්‍යාපාරය


**සම අයිතිය ව්‍යාපාරය හා සම්බන්ධවීමට අපිට කතා කරන්න.**

- ලිපිනය - 400/2, තලවතුගොඩ පාර, මාදිවෙල
- දුරකථන අංකය - 0714-966738, 011-2799432 ■ විද්‍යුත් ලිපිනය -